(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 262/2022 அ.சா.12

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அலெக்ஸ்பாண்டி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18.08.2025.

( 5ம் எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் பாண்டி கோவில் ஜே.ஜே.நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். இறந்துபோன பால்பாண்டி என் தகப்பனார். கடந்த 03.05.2019 ம் தேதியன்று 2 மணியளவில் நெல்பேட்டையில் நான் என் தாயார் மகாலெட்சுமியுடன் சாமான் வாங்க இருந்தபோது என் அண்ணன் தங்கராஜ்

எனக்கு போன் போட்டு மதியம் சுமார் 1.45 மணியளவில் TN59 BB 8124 Blue color Swizh ஐ மச்சபாலா என்பவர் ஓட்டி வந்ததாகவும், பின்னால் சைனா பிரபாகர் என்பவர் உட்காந்து வந்தததாகவும், Yamaha FZ என்ற மற்றொரு பைக்கை (பதிவெண் நினைவில்லை என சாட்சி கூறுகிறார்) நெல்சன் என்பவர் ஓட்டி வந்ததாகவும், புல்லட் மணி என்பவர் பின்னால் உட்கார்ந்திருந்ததாகவும், தனபால் ஒர்க் ஷாப் எதிர்புறம் மாநகராட்சி காம்ப்ளக்ஸ்ல் அந்தோணி ஸ்டீபன் பழைய பாத்திர துணிக்கடை வாசலில் என் அப்பா பேப்பர் படித்து கொண்டிருந்ததாகவும், அருகில் அந்தோணி ஸ்டீபன், தனபால், ATM watchman சுப்பிரமணி மற்றும் பலர் பேசிக்கொண்டிருந்ததாகவும், மேற்படி இரண்டு இருசக்கர வாகனங்களில் வந்த 4 நபர்களில், 3 பேர் அருவாள், பட்டா கத்தி, கத்தி ஆகியவற்றை வைத்திருந்ததாகவும், அவர்கள் என் அப்பாவை சுற்றி வளைத்தாகவும், என் அப்பா தப்பித்து செல்வதற்காக துணிக்கடைக்கு ஓடியதாகவும், நெல்சன் என்பவர் பைக்கில் உட்கார்ந்து கொண்டு அந்தா இருக்கான் பால்பாண்டி வெட்டிக்கொல்லுங்க என்று சொன்னதாகவும் மற்ற மூவரும் அந்த கடைக்குள் வைத்து என் அப்பாவை வெட்டி கொன்றுவிட்டதாகவும், தடுக்க போவதற்குள் அவர்கள் ராமசாமி நாயுடு சந்து வழியாக அந்த இருசக்கர வாகனங்களில் சென்றுவிட்டதாகவும், பிபி என்ற பாண்டி விஜய், குலாபி மணி, விவேக் காம்ப்ளக்ஸ் அருகே உள்ள தேவர் சிலைக்கு வடக்குபக்கமாக நின்றதாகவும், காளிதாஸ், தனபால் ஒர்க் ஷாப்பிற்கு தெற்கு பக்கம் நின்றிருந்ததாகவும் என்று வேவு பார்த்து என் அப்பா வந்த தகவலை சொன்னார். சைனா பிரபாகர் சம்பவத்திற்கு பிறகு பெரிய வாலை சம்பவ இடத்தில் தூக்கி எறிந்துவிட்டு

சென்றதாகவும் அவர் என்னிடம் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். போஸ்ட்மார்டம் செய்ய பிரேதத்தை மதுரை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார். என் அப்பாவிற்கு இடது தொடையில் பெரிய வெட்டுக்காயம் இருந்தது. பின்னந்தலையில் அதிகமான வெட்டுக்காயம் இருந்தது. மண்டை ஓடு உடைந்து மூளை வெளியே வந்ததிருந்தது. என் தகப்பனாருக்கு மார்பு, இதயம், குடல் ஆகியவற்றில் வெட்டுக்காயம் ஏற்பட்டு வெளியே வந்திருந்தது. முகத்தில் இடதுபுறம் காதிலிருந்து கடவாய் பகுதி வரை ஆழமான வெட்டுக்காயம் காணப்பட்டது. அவருக்கு வலதுகை சுண்டுவிரல், ஆள்காட்டி விரலும் வெட்டப்பட்டிருந்தது. காணப்படவில்லை. இடது கையில் 5 விரலும் வெட்டப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் கொண்டு வந்த போலீசாரும், மருத்துவரும் பிரேத பரிசோதனை கூடம் அருகே இருந்தார்கள். விசாரித்ததில் சைனா பிரபாகர், மச்சபாலா, புல்லட்மணி, பாண்டி விஜய், நெல்சன், காளிதாஸ், குலாபி மணி, ஆகியோர்கள் கள்ளத்தனமாக கஞ்சாவும் பாண்டிசேரி மதுபானம் விற்றதாகவும் அவர்களுக்கு இடையூறாக என் தகப்பனார் இருந்ததாகவும், சமீபத்தில் அவர்களது கடத்தல் வாகனம் பிடிபட்டதாகவும், அதற்கு என் தகப்பனார் காரணம் என எண்ணியிருந்ததாகவும், அவர்கள் கோவை மத்திய சிறையில் இருந்த சபா ரத்தினத்தை சந்தித்தாகவும், நமக்கு இடைஞ்சலாக இருந்த பால்பாண்டியை கொல்லுங்கடா என்று சொன்னதாகவும், அவரது தூண்டுதலின் பேரில் என் தகப்பனாரை கொன்றதாகவும் தெரியவந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக என் அண்ணன் தங்கராஜ் சாட்சி சொன்ன பிறகு எதிரிகள் அவரை மிரட்டியுள்ளார்கள். அதனால் அவர்

பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். என்னையும் கோர்ட் வளாகத்திற்குள் வைத்து புல்லட் மணி, நெல்சன் மற்றவர்களும் என்னை மிரட்டினார்கள். இது சம்பந்தமாக கமிசனரிடம் புகார் கொடுத்தேன். அது சம்பந்தமாக அண்ணாநகர் காவல்நிலையத்தில் குற்ற எண்.230/25 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என் தகப்பனார் கொலை வழக்கு சம்பந்தமாக CCTV Footage காண்பித்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக 05.05.2019 ம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 3, 4, 6, 7, 8, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

03.05.2019 ம் தேதியன்று 2 மணியளவில் நெல்பேட்டையில் நான் என் தாயார் மகாலெட்சுமியுடன் சாமான் வாங்க இருந்தபோது என் அண்ணன் தங்கராஜ் எனக்கு போன் போட்டு மதியம் சுமார் 1.45 மணியளவில் தகவல் சொன்னதாக ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன். காவல்துறை பதிவு செய்துள்ள 161(3) குவிமுச வாக்குமூலத்தை படித்து பார்த்தேன். TN59 BB 8124 Blue color Swizh ஐ மச்சபாலா என்பவர் ஓட்டி வந்ததாகவும், பின்னால் சைனா பிரபாகர் என்பவர் உட்காந்து வந்தததாகவும் போலீசார் விசாரணையில் சென்னேனா என்று கேட்டால் அதை தான் சொன்னேன். சம்பவ இடத்திற்கு உடனே சென்றதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். CCTV Footage ஐ போலீசார் என்னிடம் எப்போது காண்பித்தார்கள் என்று கேட்டால் சம்பவத்திற்கு மறுநாள் காண்பித்தார்கள். அப்போது எத்தனை மணி என்று கேட்டால் மதியம் 2 மணி இருக்கும். போலீசார் புட்டேஜ் காண்பித்ததாக சொன்ன சமயத்தில் என்னை விசாரித்தார்களா

என்று கேட்டால் அப்போது என்னை விசாரிக்கவில்லை. பிரேத பரிசோதனை சமயத்தில் மருத்துவமனைக்கு போனபோது அங்கு போலீசார் என்னை விசாரித்தார்களா என்று கேட்டால் விசாரித்தார்கள். என் மீது தூத்துக்குடி வடக்கு காவல்நிலையத்தில் குற்ற எண்.660/21 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் பதிவு செய்யப்பட்டது. அது பொய் வழக்கு. அதில் விடுதலை ஆகிவிட்டதாக சாட்சி கூறுகிறார். என் தகப்பனார் இறப்பதற்கு அவர் மீது 3 கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது என்று சொன்னால் ஒரு கொலை வழக்கு தான் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதில் மேல்முறையீட்டில் தண்டனை வழங்கப்பட்டது. அப்போது தனது தகப்பனார் உயிருடன் இல்லை என்றும், மற்ற எதிரிகளுக்கு தான் தண்டனை வழங்கப்பட்டது என்றும் சாட்சி கூறுகிறார். என் அண்ணனையும் என்னையும் எதிரிகள் மிரட்டியதாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அண்ணா நகர் காவல்நிலையத்தில் மிரட்டியதாக கூறப்படும் புகார் சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். அப்போது சம்பவ நேரத்தை மாற்றி மாற்றி வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அ.சா.1 தங்கராஜ் தன்னை யாரும் மிரட்டவில்லை என காவல்துறை ஆணையரிடம் தெரிவித்துள்ளார் என்று சொன்னால் எதிரிகள் மிரட்டலால் அவ்வாறு கொடுத்ததாக என்னிடம் சொன்னார். எதிரிகளிடம் பணம் கேட்டு மிரட்டி வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக நான் அளித்துள்ள சாட்சியம் பொய்யானது என்று சொன்னால் அது சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை அனுசரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.**

Sd/- அலெக்ஸ்பாண்டி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.